இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 21,04,2025

# தன்கர் பேசுவது சட்டபூர்வமானது அல்ல!

**த**மிழ்நாடு அரசு தாக்கல் செய்த வழக்கில் உச்ச நீதிமன்ற அமர்வு வழங்கிய தீர்ப்பு ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க.வை நிலைகுலைய வைத்துள்ளது. அவர்கள் நேரடியாக உச்சநீதிமன்றத்தை விமர்சிக்க முடியாமல், குடியரசுத் துணைத் தலைவர் ஜெகதீப் தன்கரை இறக்கி விட்டுள்ளார்கள்.

"மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்க குடியரசுத் தலைவர், மாநில ஆளுநர்களுக்கு உச்ச நீதிமன்றம் காலக்கெடு விதித்திருப்பது கண்டிக்கத்தக்கது. நீதிமன்றங்கள் குடியரசுத் தலைவரை வழிநடத்தும் சூழ்நிலை ஜனநாயகத்தில் இருக்க முடியாது. நீதிமன்றங்கள் குடியரசுத் தலைவருக்கு எந்த ஒரு உத்தரவையும் பிறப்பிக்க முடியாது" என்று பேசி இருக்கிறார் துணை குடியரசுத் தலைவர்.

"குடியரசுத் தலைவருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க முடியாது" என்று எதன் அடிப்படையில் சொல்கிறார் தன்கர்? இப்படிச் சொன்னவர், இப்படிச் சொல்கிறது அரசமைப்புச் சட்டம் என்று சொல்லி இருந்தால், அதனை எடுத்துப் படித்துப்பார்த்து விட்டு தன்கரை பாராட்டலாம். ஆனால், தன்கர் தான் யோசித்ததை எல்லாம் பேசத் தொடங்கி இருக்கிறார்.

**இந்தியாவின் குடியரசுத் தலைவருக்கு யாரும் உத்தரவு போட முடியாது என்று அரசமைப்புச் சட்டத்தில் இருக்கிறதா? இந்தியாவின் குடியரசுத் தலைவருக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட முடியாது என்று அரமைப்புச் சட்டத்தில் இருக்கிறதா? இரண்டுக்கும் பதில், 'இல்லை' என்பதுதான். பிறகு எதை வைத்துக் கொண்டு, 'குடியரசுத் தலைவருக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க முடியாது' என்று சொல்கிறார் தன்கர்?**

குடியரசுத் தலைவர் தனக்கு முன்னால் வரும் சட்ட மசோதாக்களை மூன்று மாதங்களுக்குள் முடிவெடுத்துச் சொல்லவேண்டும் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பர்த்திவாலா, மகாதேவன் அமர்வு சொன்னதில் என்ன குறையைக் கண்டீர்கள்? 'மூன்று மாதம் என்பது குறைவானது, ஆறு மாதம் வைத்துக் கொள்ளுங்கள்' என்று கேட்டால் கூட அதில் நியாயம் இருக்கலாம். ஆனால் கால நிர்ணயம் செய்யவே கூடாது என்று சொல்வது என்ன சட்டம்? நியாயம்? நீதி?

இந்திய உச்ச நீதிமன்றத்தின் நீதி விசாரணைக்கு உட்பட்ட அதிகாரங்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விதிகள் 124 முதல் 147இன் கீழ் எழுதப்பட்டுள்ளன. தன்னாட்சி அதிகாரம் கொண்ட அமைப்பு ஆகும். எவரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டாலும் அதில் தலையிடும் உரிமை உச்ச நீதிமன்றத்துக்கு உண்டு. அரசமைப்புச் சட்டப் பிரிவு 131இன் கீழ், இந்திய அரசுக்கும், மாநிலங்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டால், மாநிலங்களுக்கு இடையில் பிரச்சினை எழுந்தால் அதன் மீது முடிவெடுக்கும் அதிகாரம் தரப்பட்டுள்ளது.

அரசமைப்புச் சட்டத்தை ஆய்வு செய்யும் அதிகாரம், அதனை வரையறுத்தல், விளக்கம் அளித்தல் ஆகியவை உச்ச நீதிமன்றத்துக்கு இருக்கிறது. எந்த உயர்நீதிமன்றத்தின் எந்தத் தீர்ப்புக்கும் மேல்முறையீடு செய்யப்பட்டால் அதனை விசாரிக்கும் அதிகாரம் நீதித்துறைக்கு இருக்கிறது.

குடியரசுத் தலைவர், துணை குடியரசுத் தலைவர் தேர்தலை விசாரிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்துக்கு உள்ளது. பிரிவு 143 இன் கீழ் ஒன்றிய அரசுக்கும், குடியரசுத் தலைவருக்கும் உச்ச நீதிமன்றம் பல்வேறு காலக்கட்டங்களில் அறிவுரைகள், வழிகாட்டுதல்கள் வழங்கி உள்ளது.

அரசமைப்பை பாதுகாக்கும் அதிகாரமும் பொறுப்பும் உச்சநீதிமன்றத்துக்கு இருக்கிறது. அதனால்தான் நீதிபதிகள் பல்வேறு காலக்கட்டங்களில் அரசமைப்பு சட்டத்தின் பக்கத்தில் நின்று கேள்வி கேட்கிறார்கள். நாடாளுமன்றத்திலோ, சட்டமன்றத்திலோ, உயர்நீதி மன்றங்களிலோ சட்ட முரணான தீர்ப்புகள் வழங்கப்பட்டால் அதனை விசாரிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்துக்கு இருக்கிறது. அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப் படாத அதிகாரங்களை நாடாளுமன்றமானது உச்ச நீதிமன்றத்துக்கு வழங்கலாம்.

இந்த வரிசையில் உள்ள முக்கியமான அதிகாரம்தான் பிரிவு 142 ஆகும்.

**"அரசமைப்புச் சட்டம் 142 ஆவது பிரிவின்படி உச்ச நீதிமன்றத்துக்கு அதிகாரம் இருக்கிறது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்ட மசோதாக்களை ஒப்புதல் தரப்பட்டவையாக நாங்கள் அறிக்கிறோம். நீண்ட காலமாக மசோதாவை நிலுவையில் வைத்திருந்த ஆளுநர், அதனை குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்ததன் மூலமாக நேர்மையற்ற செயல் செய்துள்ளார். இது போன்று பஞ்சாப் அரசு தாக்கல் செய்த வழக்கில் உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை தந்தது. அன்றைய தினம், குடியரசுத் தலைவருக்கு தமிழ்நாடு ஆளுநர் திருப்பி அனுப்பி இருக்கிறார். எனவே, மசோதாக்கள் மறுபரிசீலனைக்கு எப்போது தமிழ்நாடு அரசால் அனுப்பி வைக்கப்பட்டதோ, அந்த நாளில் இருந்தே அவை ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றன"** என்று உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் ஜே.பி.பார்த்திவாலா, ஆர்.மகாதேவன் அமர்வு தீர்ப்பு அளித்தது.

**"அரசியல் சாசனம் பிரிவு 142 இன் படி முழுமையான நீதியை வழங்குவதற்குத் தேவையான எந்தத் தீர்ப்பையும் அல்லது உத்தரவையும் உச்சநீதிமன்றம் வழங்கலாம்." என்று உச்ச நீதிமன்றத்தின் அந்த அமர்வு சொன்னது. இது பா.ஜ.க.வின் சதி அரசியலை ஆட்டம் காண வைத்துள்ளது.**

தமிழ்நாடு அரசால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அரசமைப்பு சட்டத்துக்கு தான் உச்ச நீதிமன்றம் பாதுகாப்பு தருகிறது. அதுகூட பொறுக்கவில்லை தன்கருக்கு.

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், "மக்களாட்சியில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் அரசை நடத்த வேண்டும், அலங்கார நியமனப் பதவிகளில் அமர்ந்திருப்பவர்கள் அல்ல. எந்தத் தனிநபரும், அது எத்தகைய உயர் பொறுப்பில் இருப்பவரானாலும் அவர் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும். இதைத்தான் உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது."** என்று மிகச் சரியாகச் சொல்லி இருக்கிறார்கள்.

ஆளுநர்களும் குடியரசுத் தலைவரும் அமைச்சர்கள் குழுவின் 'உதவி மற்றும் ஆலோசனை'யின் பேரில்தான் செயல்படுகிறார்கள். செயல்பட வேண்டும் என்பதுதான் இந்திய அரசமைப்புச் சட்டம் ஆகும். **சட்டமன்றங்களால் நிறைவேற்றி அனுப்பப்படும் சட்டத்தை, ஆளுநர்கள் நிறுத்தி வைப்பதைப் போல, நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை குடியரசுத் தலைவர் நிறுத்தி வைத்தால் என்ன ஆகும்? நிறுத்தி வைக்க அனுமதிப்பார்களா ஒன்றிய ஆட்சியாளர்கள்?**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (20.4.2025) அண்ணா அறிவாலயத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக எம். ஏ. பேபி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதையொட்டி சந்தித்தபோது, முதலமைச்சர் அவர்கள், அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தார். இந்த நிகழ்வின்போது கழகப் பொருளாளரும், மக்களவை கழகக் குழுத் தலைவருமான டி. ஆர். பாலு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம், மத்தியக் குழு உறுப்பினர்கள் கே. பாலகிருஷ்ணன், உ. வாசுகி ஆகியோர் உடனிருந்தனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசு அமலாக்கத்துறை – புலனாய்வு அமைப்புகளை

## காங்கிரஸ் கட்சி மீது ஏவிவிடுவது - ஜனநாயகத்தில் அருவருக்கத்தக்க அரசியல்!

### கழகப் பொருளாளர் – மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அறிக்கை!

**சென்னை, ஏப். 21 -**

**அமலாக்கத்துறை உள்ளிட்ட புலனாய்வு அமைப்புகளைக் காங்கிரஸ் கட்சி மீது ஒன்றிய பா.ஜ.க. அரசு ஏவி விடுவது ஜனநாயகத்தில் அருவருக்கத்தக்க அரசியல் என்று கழகப் பொருளாளரும், மக்களவைக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு எம்.பி. அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் அறிக்கை வருமாறு:

ஒன்றிய பா.ஜ.க. அரசின் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாக நேஷனல் ஹெரால்டு வழக்கில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களான திருமதி. சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோர் மீது அமலாக்கத்துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளதற்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



குஜராத்தில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகள் பற்றி நடைபெற்ற கருத்துருவாக்கமும் காங்கிரஸ் தொண்டர்களின் எழுச்சியும் பா.ஜ.க.வை மிரள வைத்திருக்கிறது போலிருக்கிறது. கடந்த முறை சத்தீஸ்கர் மாநிலத் தலைநகர் ராய்ப்பூரில் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு நடைபெற்ற போது அமலாக்கத்துறை மூலம் அம்மாநில காங்கிரஸ் தலைவர்களின் வீடுகளில் ரெய்டு நடத்தியது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

இப்போது குஜராத் எழுச்சிக்குப் பிறகு, அதே பாணி அரசியலை கையிலெடுத்து காங்கிரஸ் அகில இந்திய தலைவர்கள் மீது குற்றப்ப த்திரிகையைத் தாக்கல் செய்துள்ளது. வஃக்பு திருத்தச் சட்ட மசோதாவுக்கு எதிராகக் காங்கிரஸ் உறுதியாக நின்று எதிர்கட்சிகளை ஒருங்கிணைத்து வாக்களிக்க வைத்துள்ளதும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வயிற்றில் புளியைக் கரைக்கிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத திட்டங்களை தோல்விகளை மக்களிடம் எடுத்துச் செல்கின்ற காங்கிரஸ் கட்சியைப் பார்த்து பா.ஜ.க. மிரட்சியில் இருக்கிறது. அதனால்தான் அமலாக்கத்துறை காங்கிரஸ் கட்சியைச் சுற்றிச் சுற்றியே வந்து கொண்டிருக்கிறது. இப்போது அதன் தலைவர்களான திருமதி. சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி ஆகியோரையும் விட்டு வைக்கவில்லை!

காங்கிரஸ் போன்ற பிரதான எதிர் கட்சியை அரசியல் ரீதியாக எதிர் கொள்ளத் துணிச்சலற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசு, இப்படி அமலாக்கத்துறை உள்ளிட்ட புலனாய்வு அமைப்புகளைக் காங்கிரஸ் கட்சி மீது ஏவி விடுவது ஜனநாயகத்தில் அருவருக்கத்தக்க அரசியல் மட்டுமல்ல! யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாத வெட்கி தலைகுனிய வேண்டிய அரசியல் பழிவாங்கும் செயலாகும்!

ஆட்சிக்கு வந்ததில் இருந்து அமலாக்கத்துறையைத் தனது கூட்டணிக் கட்சியாகச் சேர்த்துக் கொண்டு இப்படி பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒன்றிய அரசு இனிமேலாவது காங்கிரஸ் கட்சியை மட்டுமல்ல எதிர்கட்சிகளை அரசியல் ரீதியாகவே சந்திக்கும் துணிச்சலைப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

## அ.தி.மு.க. - பா.ஜ.க. சந்தர்ப்பவாத கூட்டணியை மக்கள் முறியடிக்க வேண்டும்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி சந்தித்தப்பின் பேட்டி!

**சென்னை, ஏப். 21 -**

**அ.தி.மு.க. - பா.ஜ.க. சந்தர்ப்பவாத கூட்டணியை மக்கள் முறியடிக்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்தப்பின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில் குறிப்பிட்டார்.**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளராக எம்.ஏ.பேபி அண்மையில்தேர்வுசெய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து சென்னை வந்த அவர், அண்ணா அறிவாலயத்தில் நேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்தார்.

அப்போது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டுள்ள எம்.ஏ.பேபிக்கு முதலமைச்சர் வாழ்த்து தெரிவித்தார்.



இந்த சந்திப்பின் போது, மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் சண்முகம், மூத்த தலைவர் கே.பாலகிருஷ்ணன் உள்ளிட்டவர்கள் உடனிருந்தனர். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய எம்.ஏ.பேபி, மதவெறி சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்பான பங்களிப்பை அளித்துவருவதாகத் தெரிவித்தார்.

வரும் சட்டமன்றத் தேர்தலில், அ.தி.மு.க. - பா.ஜ.க. சந்தர்ப்பவாத கூட்டணியை மக்கள் முறியடிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## பெரம்பலூர்: வேப்பூர் தெற்கில் தண்ணீர் பந்தல் திறப்பு!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

பெரம்பலூர், ஏப். 21 -

பெரம்பலூர் மாவட்டம் முழுவதும் கோடை காலத்தை முன்னிட்டு ஆங்காங்கே தண்ணீர் பந்தல் திறந்து வைக்க வேண்டும் என்ற தலைமைக் கழக அறிவிப்பின் படி தண்ணீர் பந்தல்கள் திறந்து வைக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில், குன்னத்தில் கோடைகால நீர் மோர் பந்தலை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து, பொதுமக்களுக்கு தாகம் தீர்த்தார்.

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாவட்ட கழக துணைச் செயலாளர் சன்.சம்பத்,

வேப்பூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் சி. ராஜேந்திரன், வடக்கு ஒன்றிய கழக செயலாளர் தி. மதியழகன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் அழகு நீலமேகம்,

பட்டுச்செல்வி ராஜேந்திரன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் பிரபா செல்லப்பிள்ளை,

மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி உள்ளிட்ட கழக மாநில, மாவட்ட, ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தை வருகின்ற மே மாதம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்க உள்ளதை முன்னிட்டு அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகர காவல் ஆணையர் திருமதி. காமினி, மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், வருவாய் கோட்டாட்சியர் அருள், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (கட்டிடங்கள்) திருமதி.பி.அன்பரசி, நகரப் பொறியாளர் சிவபாதம், மாநகராட்சி அலுவலர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.